இலங்கை அரசாட்சி "கசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE, No. 6,083, NOVEMBER 3, 1905.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

## LAND SALES.

No. 488, N. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பு, 1905 ம் ஞு ஐப்பசி 31 ந் உ.

1905 ம் ஆண்டு மார்கழிமாதம் 20 ந் தேதி, புதன்கிழமை, பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணத்தில் தன் ஆபிசில் வடமாகாணத்து கவர்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும்.

31 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் தென்மருட்சி முதலிய பகுதியிலிருக்கின்றன.

பிளான் இலக்கம் 2,987. உரித்தாளி—முடி.

| காணி இல. | குறிச்சி. | கேள்விக்காரன் பெயர். | விபரம். | விசாலம். அ. | று. | பே. | தீர்ப்புவிலை அக்கறொன் முக்கு. ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 11105 | சரசாலை | சண்முகம் பெண் வள்ளிப் பிள்ளை | நெல்வயல் | 1 | 3 | 34 | 20 | 0 |
| 11106 | டிை | சேதுபதி | டிை | 0 | 0 | 26 | 25 | 0 |
| 11107 | டிை | ஆ. முருகர் | டிை | 0 | 0 | 38 | 25 | 0 |
| 11108 | டிை | எஸ். சரவணை | டிை | 0 | 2 | 18 | 10 | 0 |
| 11109 | டிை | தையல் நாயகி | டிை | 0 | 0 | 8 | 20 | 0 |
| 11110 | டிை | டிை | டிை | 0 | 0 | 18 | 20 | 0 |
| 11111 | டிை | டிை | டிை | 0 | 0 | 2 | 20 | 0 |
| 11112 | டிை | எஸ். சரவணை | டிை | 0 | 0 | 8 | 10 | 0 |
| 11113 | டிை | தி. அப்பாபிள்ளை | காடு | 3 | 0 | 10 | 10 | 0 |
| 11114 | டிை | — | காடு | 7 | 3 | 36 | 10 | 0 |
| 11115 | டிை | தையல நாயகி | நெல்வயல் | 1 | 2 | 39 | 15 | 0 |
| 11116 | டிை | தி. அப்பாபிள்ளை | தரிசு | 2 | 3 | 26 | 15 | 0 |
| 11117 | டிை | பெ. வேலன் | நெல்வயல் | 0 | 0 | 22 | 20 | 0 |
| 11118 | டிை | டிை | டிை | 0 | 2 | 34 | 25 | 0 |
| 11119 | டிை | வ. கந்தையா | டிை | 0 | 3 | 26 | 30 | 0 |
| 11120 | டிை | டிை | தரிசு | 0 | 3 | 12 | 10 | 0 |
| 11121 | டிை | டிை | தரிசு | 5 | 3 | 24 | 10 | 0 |
| 11122 | டிை | டிை | தரிசு | 0 | 3 | 7 | 10 | 0 |
| 11123 | டிை | அ. சிவகுரு | புகையிலைத்தோட்டம் | 1 | 2 | 5 | 20 | 0 |
| 11124 | டிை | வ. கந்தையா | டிை | 0 | 1 | 12 | 20 | 0 |
| | | படம் 3,047 உரித்தாளி.—முடி. | | | | | | |
| 11334 | டிை | வ. கந்தையா | புகையிலைத்தோட்டம் | 0 | 0 | 36 | 10 | 0 |
| 11335 | டிை | ச. கணபதி | டிை | 0 | 2 | 16 | 20 | 0 |
| | | படம் 3,099. உரித்தாளி—முடி. | | | | | | |
| 11516 | நாவற்குழி | பஜனுனந்த மீசார் | தென்னந்தோட்டம் | 0 | 0 | 30 | 12 | 50 |
| 11517 | டிை | டிை | காடு | 0 | 0 | 10 | 12 | 50 |
| 11518 | டிை | நாகரத்தினம் பெண் இராசம்மா | காடு | 0 | 0 | 26 | 20 | 0 |
| 11519 | டிை | பஜனுனந்த மீசார் | தென்னந்தோட்டம் | 0 | 0 | 38 | 12 | 50 |
| 11520 | டிை | க. தம்பையா | காடு | 10 | 3 | 22 | 10 | 0 |
| 11521 | டிை | மு. செல்வத்துரை | காடு | 17 | 3 | 30 | 10 | 0 |
| | | படம் 2,994. உரித்தாளி—முடி. | | | | | | |
| 11141 | புலோப்பளை | எம். எஸ். இராசகாரியர் | காடு | 9 | 1 | 20 | 10 | 0 |
| 11143 | டிை | டிை | தென்னம்பிள்ளை | 0 | 3 | 5 | 12 | 50 |
| 11144 | டிை | டிை | டிை | 0 | 3 | 23 | 12 | 50 |

இக்காணிகளின் விபரங்களைப்பற்றி சேர்வையர் ஜெனறல்துரை அவர்களிடத்திலும் விற்பனவின் கொந்திசைப் பற்றி வடமாகாண ஏசன்றுத்துரை யவர்களிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமரவர்களினது கட்டளையின்படி,

ஜி. எம். பௌலர்,
இராசாங்க விசிதரின் வேலைபார்ப்பவர்.

149

No. 1,532, N.C. P.

கொலோனியல் சக்கிறித்தார் ஆபிசில்,
கொழும்பில், 1905 ம் ௵ ஐப்பசிமீ 7 ந் உ.

1905 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 23 ந் தேதி, 11·25 மணியளவில் வடமத்திய மாகாணத்து கவர்ண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும்.

காணித்துண்டுகள், வடமத்திய மாகாணத்து அநுராசபுரப் பட்டணத்திலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 2,485. உரித்தாளி—முடி.

| காணி இல. | குறிச்சி. | கேள்விக்காரன் பெயர். | விவரம். | விசாலம். ஏ. ரூ. ப. | குறித்த விதம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 7706 | திச்சாவெவ | — | கசிவுள்ள தறை வயலுக்குக் கூடியது | 0 3 23 | 20 |

இக்காணிக்குத் தண்ணீர்வரி சதாகாலத்துக்கும் அறவிடப்படும்.

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களை சேர்வையர் ஜெனறலிடமும் விற்பனவின் கொந்திசைப்பற்றி வடமத்திய மாகாண ஏசன்றுத்துரை அவர்களிடமும் வினவி அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமரவர்களினது கட்டளையின்படி,

ஜீ. எம். பௌலர்,
இராசாங்க லிகிதரின் வேலைபார்ப்பவர்

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1905 ம் ௵ நவம்பர் (கார்த்திகை)மீ 3 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் டபிள்யு. ஈ. உவேற்துரை அவர்களிடம் கொழும்பு முகத்துவாரம் "ஹில் ஹவுஸ்" என்னும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஈ. உவேற்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமத்திய மாகாணம் உறுளுபளாத்தை உலுகல்லகோறளை நாச்சாதுவைளையைச்சேர்ந்த வீரப்புடிக்குளம் என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும்* உறுதிப்படுத்திய படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க் குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதம படம 400.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|
| 2 | வீரப்புடிக்குளமேகேலை | 101 3 26 |
| 3 | வீரப்புடிக்குளமேமூக்கலான | 127 1 7 |
| 5 | வெலிகலமூக்கலான | 2 0 38 |
| 6 | வீரப்புடிக்குளமேகேலை | 80 1 5 |
| | | 311 2 36 |

எல்லைகளாவன : வடக்கும் கிழக்கும்-குசாவக் கிராம எல்லை ; தெற்கு-குஞ்சிக்குளக் கிராம எல்லை, வெல்லமூடாவக் கிராம எல்லை ; மேற்கு-கம்மில்லக்குளக் கிராம எல்லை.

கவனிப்பு—மேற்சொல்லிய எல்லைகளுக்குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள், இவ்வறிவித்தலினின்றும் நீக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும், அவைகளின் விசாலத் தொகையாகும் 23 ஏக்கர் 3 றூட்டு 31 பேட்சும் முன் சொன்ன 311 ஏக்கர் 2 றூட் 36 பேட்சுக்குள் அடங்கவில்லை யென்பதையுங் கவனிக்கவேண்டியது :—

பிரதம படம் 400.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|
| 1 | வீரப்புடிக்குளமவெவ | 4 2 20 |
| 4 | வீரப்புடிக்குளமவெவ | 19 1 11 |
| | | 23 3 31 |

* இங்கிலீசின் IV. ம் பாகம் 1394 பக்கத்தின் படத்தைப்பார்க்க.

2,336 Anuradhapura S. O. 123—1905

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1905 ம் ௵ கார்த்திகைமீ 3 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், ஊவாமாகாணம் கவண்மேந்து ஏசண்டு அவர்களிடம் வதுளைக் கச்சேரியில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய கவண்மேந்து ஏசண்டு 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

சி. எம். லஷிங்டன்,
கவண்மேந்து ஏசண்டு.

சுட்டிய காணிகளின் விவரம்.

ஊவா மாகாணம் உடுக்கிந்தைப் பகுதி தெகிவினிப்பளாத்தைக் கோறளையைச்சேர்ந்த வெல்லேவெல யென்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும்* உறுதிப்படுத்திய படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித் துண்டுகள் :—

I

பிரதம படம் 18.

| காணித்துண்டு. | காணியின் பேர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 14 ... | தண்டுபொலஅல்லேளை ... ... | 1 0 15 |

எல்லைகளாவன : வடக்கு-வதுளையிலிருந்து நுவரெலிக்குப் போகும் ரோட்டு ; கிழக்குத் தெற்கும்-மாத்தேத்தில்லை ஓயா என்னும் ஆறு ; மேற்கு-முடிக்குரிய தண்டுபொலஅல்லேபத்தன.

II.

பிரதம் படம் 18.

| காணித்துண்டு. | காணியின் பேர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| பி. ப. 738/2,551 ... | வட்டவெத்தேபத்தன ... ... | 8 0 34 |

எல்லைகளாவன : வடக்கு-ஊமாஓயா என்னும் ஆறு, முடிக்குரிய பிற்றுஅல்லே முதுவியன ; கிழக்கு-175,815 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி ; தெற்கு-ஒரு நீரோடை ; மேற்கு-ஊமாஓயா என்னும் ஆறு.

III.

பிரதம படம் 18.

| காணித்துண்டு. | காணியின் பேர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| பி. ப. 738/2,553 ... | வட்டவெத்தபத்தன தண்டுபொலஅல்லேபத்தன ... | 1 2 20 |

எல்லைகளாவன : வடக்கு-175,815 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி; கிழக்கு-170,761 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி, நுவரெலியாவிலிருந்து வதுளைக்குப்போகும் ரோட்டு; தெற்கு-ஒரு நீரோடை; மேற்கு-175,815 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி.

*இங்கிலீசின் IV. ம் பாகம் 1395, 1396, 1397 ம் பக்கங்களின் படத்தைப்பார்க்க.

2 337

---

[Tender for the sale of Opium License, Talawakele.]

இதனால் சகலருக்கும் அறிவிப்பது யாதெனில், "1899 ம் ஆண்டு துவங்கி 1905 ம் ஆண்டு வரைக்கும் இயற்றப்பட்ட அபின் கட்டளைச்சட்டங்களின்" ஏற்பாடுகளின்படி, 1906 ம் ஆண்டு தைமாதம் 1 ந் திகதி துவங்கும் வருஷத்திற்கு தலவாக்கொல்லைப் பட்டணத்திற்குள் சில்லறையில் அபின் விற்பதற்கு ஒரு உத்தரவுப்பத்திரம் கொடுக்கப்படும்.

2. மேற்சொல்லிய உத்தரவுப்பத்திரத்தின் விற்பனவிற்காக 1905 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 16 ந் தேதியன்று பிற்பகல் 1 மணி வரைக்கும் கண்டி கச்சேரியில் மத்திய மாகாணம் கௌரவ அரசாட்சி ஏசண்டரால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

3. 1905 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 16 ந் தேதியன்று பிற்பகல் 1 மணிக்கு கண்டி கச்சேரியில் கேள்விக்காரன் தானாயாவது, முறைமையாக எழுத்தில் அதிகாரம்பெற்ற அவனது காரியஸ்தனாவது வந்து சமுகமாயிருந்து, தனது கேள்வித்தொகையில் மூன்றிலொரு பங்கு கட்ட ஆயித்தமாயிருந்தாலொழிய யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் திருப்திகரமாயில்லாவிட்டால், மத்தியமாகாண கௌரவ அரசாட்சி ஏசண்டர் தன்னுடைய இஷ்டப்படி புதுக்கேள்விப்பத்திரங்கள் தரும்படி கேட்கலாம், அல்லது "1899 ம் ஆண்டு துவங்கி 1905 ம் ஆண்டு வரைக்கும் இயற்றப்பட்ட அபின் கட்டளைச்சட்டங்களில்" ஏற்பாடுகளின்படி அந்தக்குத்தகையை வேறுவிதமாய் முடிவாக்கலாம்.

எச். வேஸ்,
மத்தியமாகாண அரசாட்சி ஏசண்டு.

கண்டி கச்சேரி, 1905 ம் ஆண்டு அற்பசிமீ 27 ந் உ.

சில்லறையில் அபின் விற்க உத்தரவுப்பத்திரங்கள் கொடுப்பதற்கு ஏற்படுத்திய கட்டுப்பாடுகள்.

1. சில்லறையில் அபின் விற்க உத்தரவவாங்கினவன் ஆனவன், தக்க அதிகாரமுடையவராலே வாங்கினவன் அவன் என்று வெளிப்படுத்திய உடனே, தனது கேள்வித்தொகையில் மூன்றிலொருபங்கை ரொக்கமாகக் கட்டிவிடுதல் வேண்டும். தக்க அதிகாரமுடையார் அந்தத் தொகையைப் பிணையாக வைத்துக்கொள்ளல் வேண்டும்; கடைசி நாலு மாதத்துத் தவணைப்பணத்துக்கல்லாமல் கேள்வித்தொகையின் தவணைப்பணமாக அதை உபயோகிக்கக்கூடாது. கேள்வித்தொகையைப் பன்னிரண்டு மாசத்துக்குஞ் சமமான தொகைப்பாகமாய்ப் பிரித்து குத்தகை யிருக்கும் வரையும் மாசந்தோறும் கடைசித் தேதி நாளில் கொடுத்துவிடல் வேண்டும். முதலாம் தவணைப் பணத்தை ஜனவரி (தை)மீ 31 ந் தேதியில் கொடுத்துவிடல் வேண்டும். ஒரு தவணைப்பணம் நிலுவையாம்போது நாள் ஒன்றுக்கு நூற்றுக்கு வருஷாந்த ஒன்பது வீதவட்டி கொடுத்தல் வேண்டும். உத்தரவு வாங்கினவனது வேண்டுகோளின்படி பிணைப் பணத்தொகையை அவனுக்குப் பிரியமான ஒரு வங்கியிலே நிலையாய் (டிபசிட்) போட்டுவைக்கலாம் ; அதில் ஏதும் நஷ்டம் நேரிட்டால் அது அவன் பாரமாகும். குறித்த தவணைத் தேதியிலே பணங் கொடுக்கத் தவறினால் நஷ்டம் அவனது பாரமாக, தக்க அதிகாரமுடையவர் உத்தரவை மறுபடி விற்கலாம் அல்லது செல்லாமல் நிற்கும் அத்தனை காலமளவு பாகத்தை விற்கலாம்.

2. இதனால் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்ட பண்டசாலை அல்லது இடமானது இந்த உத்தரவுப்பத்திரத்துப் பக்கத்திலே பூரணமாக விவரித்துக் காட்டியிருக்க வேண்டியது ; அப்படி விவரித்துக்காட்டிய இடத்திற்கேயல்லாமல் மற்றொன்றுக்கு இந்த உத்தரவுப்பத்திரம் பொருந்துவதன்று.

3. இதனால் உத்தரவுபெற்ற இடமானது வேறும் எந்தக் கட்டடங்களோடாயினும் இடங்களோடாயினும் உட்புறமாகப் போக்குவரவு செய்யத்தக்கதாக இருக்க ஒண்ணாது.

4. இதனால் உத்தரவுபெற்ற இடத்தைத் துப்பரவாகவும் சுகவளமுடையதாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

5. தக்க அதிகாரமுடையவரால் எழுத்து மூலமாக இன்ஸ்பட்டர் பரிசோதகராக நியோகிக்கப்பட்ட எவரொருவராயினும், இன்ஸ்பட்டர் நிலைமைக்குக் கீழ்ப்படாத பொலீஸ் உத்தியோகஸ்தர் எவரொருவராயினும் கேட்கும்போது, இதனால் உத்தரவுப்பெற்ற இடத்தைப் பரிசோதனைக்காகத் திறந்து காட்டுதல் அவ்விடத்தைப் பொறுப்பாக உடையவனது கடமையாம். மேலும் அவன் தன் வசத்துள்ள அபினினது வரவு செலவுக் கணக்கைப்பற்றிய சகல புத்தகங்களையும் காகிதபத்திரங்களையும், கணக்குத்தொகைகளையும் காட்டவும் கடமைப்பட்டவனுவன்; மேலும், அப்படிச் செய்யும்படி

விசேஷமாகக் கேட்கப்பட்டால், பரிசோதனைக் காலத்திலே கையிருப்பில் அல்லது அவ்விடத்தில் உள்ள அபினை யெல்லாம் இன்ஸ்பட்டர் அல்லது பொலிஸ் உத்தியோகஸ்தர் முன்னிலையிலே நிறுக்கவுங் கடமைப்பட்டவனுவன்; மேலும் அவன் கையிருப்பில் உள்ள அளவிற்கும், பரிசோதனைக் காலத்திலே புத்தகக் கணக்கின்படி கையிருப்பில் இருக்கவேண்டிய அளவிற்கும் உள்ள யாதேனும் ஓர் வித்தியாசத்தைத் தன்னால் கூடியமட்டும் விளங்கப்படுத்திக் காட்டவும் வேண்டும்.

6. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் சாப்பிடுதல் ஒண்ணாது.

7. இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் உள்ள யாதும் அபினைக் கலந்து கெடுத்தலாவது எவ்விதத்தும் பழுதுபடுத்தலாவது செய்ய ஒண்ணாது.

8. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதுங் குழப்பமான நடக்கைகளுக்கு இடங்கொடுக்க ஒண்ணாது.

9. குடியினால் வெறித்திருக்கும் அல்லது அபினால் வெறித்திருக்கும் எவனொருவனுக்காவது, தோற்றத்தளவில் பதினைந்து வயசுக்குட்பட்ட எவனொருவனுக்காவது, இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் கொடுக்க ஒண்ணாது.

10. மாலையில் எட்டு மணிக்கும் காலையில் ஆறு மணிக்கும் இடையிலுள்ள நேரங்களில், இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் ஒப்பிக்கவும் ஒண்ணாது, கொடுக்கவும் ஒண்ணாது, வாங்கிவைக்கவும் ஒண்ணாது.

11. இலக்கமிட்ட பக்கங்களுடையதாய்க் கட்டப்பெற்ற ஒரு கையிருப்புப் புத்தகம் ஆகிய ஸ்தொக் புத்தகம் ஒன்று, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்துக்காக அப்படியான புத்தகப்பிரதியொன்று தக்க அதிகாரமுடையவர் உத்தரவுப்பத்திர மெடுப்பவனுக்கு அப்போது விலையில்லாமல் சும்மா கொடுப்பார். புது புத்தகம் ஒன்று வேண்டுமானால், அதை உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே விலைகொடுத்துக்வாங்கிக்கொள்ள வேண்டியது. அவரிடத்தே முந்தின புத்தகத்தை ஒப்பித்துவிடல் வேண்டும்.

12. கொடுக்கல் வாங்கல் நடைபெற்றவுடனே அபின் பெற்றதொகையும் செலவான தொகையு மெல்லாம் கையிருப்புப் புத்தகத்திலே கிரமமாக எழுதிவைத்திருக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாம்; புத்தகத்தில் பந்திக் கோலங்களெல்லாம் சர்வர எழுதி நிரப்பியிருக்கவேண்டும், அன்றைத்தினத்து முதலிலும் முடிவிலும் கையிருப்பிலுள்ள தொகையை தெளிவுபெறக் காட்டியிருக்கவேண்டும்.

13. ஒவ்வோர் மாசத்து இரண்டாந் தேதியிலாவது அதற்கு முன்னேயாவது கையிருப்புப் புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், 20 ம் கொத்தின்படி வைத்திருக்கவேண்டிய புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரைக்கு அனுப்பிவைப்பதும் உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

14. தாம் பெற்றுக்கொள்ளும் அப்படிப்பட்ட சரியான பிரதிகளுக்காக உத்தரவுபெற்றவனுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பது பொலிஸ் இன்ஸ்பட்டர்பெரியதுரையது கடமையாகும். உத்தரவுபெற்றவன் தான் சரியான பிரதிகளைத் தபாலில் அனுப்பிய ஒரு கிழமையினுள்ளே அந்தப் பற்றுச்சீட்டுத் தனக்குக் கிடைக்கப்பெறவில்லையென்றால், பொலீஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரைக்கு எழுதி அந்தச் சரியான பிரதிகள் கிடைத்ததோ என்று விசாரித்து அவை தவறிவிட்டால் நூணப்பிரதிகள் கொடுப்பது அந்த உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

15. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே தான் வேலைபார்க்க நியமிக்கப்போகிறவர் இன்னர் இன்னர் என்று காட்டி ஓர்பேர்வழி டாப்பை உத்தரவுபெற்றவன் உத்தரவுபெறுதற்கு முன்னே தக்க அதிகாரமுடையவரிடத்தே ஒப்பிப்பது அவனது கடமையாகும். ஒவ்வொரு பணிவிடைக்காரன் முழுப்பெயரும் விவரமும் அவன் பார்ப்பது இன்ன வகையான பணிவிடையென்றும் அந்த டாப்பிலே விதந்து காட்டியிருத்தல் வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாவரும் இருபத்தொரு வயசு சென்றவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் நல்ல நடக்கையுள்ளவர்களெனத் தக்க அதிகாரமுடையவர் திருப்திப்பட்டுக்கொள்ளவும் வேண்டும். தக்க அதிகாரமுடையவராலே இந்த உத்தரவுப்பத்திரத்தில் மாட்டறைந்த பேர்வழிகாரனல்லாத மற்றெவனொருவனும் தன் கணக்கில் அபினைப் பொறுப்பெடுக்கவாவது, பெற்றுக்கொள்ளவாவது, விலைப்படுத்தவாவது, உத்தரவுபெற்றவன் பணிவிடைபார்ப்பிக்க ஒண்ணாது; அப்படியே மாட்டறைவுபெற்ற பேர்வழி காரனல்லாத எவனொருவனையும் மேற்கண்ட கடமைகளுள் யாதொன்றையுஞ் செய்யவிட ஒண்ணாது.

16. பணிவிடைபார்க்கும் பேர்வழிகாரரது டாப்பிலே வேண்டியனவான மாற்றங்களைச் செய்தற்காக, உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே காலத்துக்குக்காலம் கேட்டுக்கொள்ளலாம்; அந்த மாற்றங்கள் இந்த உத்தரவுப்பத்திரத்திலே மாட்டறைந்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடைபார்க்கும் எவனொருவனையும் நீக்கிவிடும்படியாகத் தக்க அதிகாரமுடையவரிடத்தேயிருந்து நொத்தீஸ் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற உத்தரவுபெற்றவன், அந்த அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமையினுள்ளே, இந்த உத்தரவுப்பத்திரத்திலிருந்து அப்பணிவிடைக்காரனது பெயரை நீக்கிவிடும்படியாக, தக்க அதிகாரமுடையவரிடத்தே இந்த உத்தரப்பத்திரத்தைக் கொண்டுபோய்க் காட்டவேண்டும். அதன்பின் அப்படிப்பட்டவன் இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்ப்பதற்கு யோக்கியனுகமாட்டான்.

17. இந்த உத்தரவுப்பத்திரத்தின் இலக்கமும் உத்தரவுபெற்ற தனது பெயரும் "சில்லறையில் அபின் விற்க உத்தரவுபெற்றது" என்ற வாக்கியமும் தெளிவாய் எழுதின தொரு பலகையை, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் எல்லார்க்கும் நன்றாய்த் தெரியக்கூடிய இடத்திலே பதித்துவைக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

18. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே அபின் அல்லது சுருட்டு விற்பலையல்லாமல் வேறொரு வியாபாரமாவது தொழிலாவது நடப்பித்தல் ஒண்ணாது.

19. அவ்விடத்திற்றுனே கொடுத்த காசு ரொக்கத்துக்கல்லாமல் யாதொரு அபினும் விற்க ஒண்ணாது.

20. நாலு டிறும் நிறைக்கு அதிகமான அபினை விற்றபோதெல்லாம், அதை வாங்கினவனுடைய முழுப் பெயரையும் மேல்விலாசத்தையும் விற்ற அளவையும் விற்ற தேதியையுங் காட்டி, கையிருப்புப் புத்தகத்திலே "குறிப்பு" பந்திகலத்திலே எழுதிவைப்பது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

21. உத்தரவுபெற்ற இடத்திலே எந்த நேரங்களிலும் உபயோகிக்கிறதற்காக ஒரு கூட்டம் தராசுபடிகளும், கால் அவுன்ஸ், அரை அவுன்ஸ், ஒரு அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ, நாலு அவுன்ஸ, எட்டு அவுன்ஸ், ஒரு றாத்தல, இரண்டு றாத்தல் நாலு றாத்தல், எழு றாத்தல ஆகிய அவாடுபோர்ச் சமானிய தரத்து நிறைகளையும் வைத்திருத்தல் வேண்டும்.

22. கணக்குப்புத்தகம் வைப்பதற்காக, உத்தரவுபெற்றவன் இதன் பின்னுற் சொல்லப்பட்ட விதிகளை அனுசரித்து நடத்தல் வேண்டும் :—

சில்லறை அபின் வியாபாரிகள் வைத்திருக்கவேண்டிய கையிருப்புப் புத்தகத்து மாதிரிப் பக்கம் :—

| தேதி | | ரூ. | அ. | டி. | | யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது. | குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|---|
| ஆனி 1.—கையிருப்பு அபின் பாக்கி | ... | 17 | 8 | 4 | | | |
| பெற்றுக்கொண்டது | ... | 10 | 8 | 2 | | | |
| மொத்தம் | ... | 28 | 0 | 6 | ... | இலக்கம் 1 மொத்த விலையாளன் சுவான்பிள்ளை | |
| கொடுத்தது ... | ... | 1 | 7 | 9 | | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 26 | 8 | 13 | | | |
| ஆனி 2.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | | | | |
| மொத்தம் | ... | 26 | 8 | 13 | | | |
| கொடுத்தது ... | ... | 0 | 15 | 5 | | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 25 | 9 | 8 | | | |
| ஆனி 3.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | | | | |
| மொத்தம் | ... | 25 | 9 | 8 | | | |
| கொடுத்தது ... | ... | 2 | 7 | 1 | | | |

### கையிருப்பு ஸ்தொக் புத்தகம் வைத்திருப்பதற்கான விதிகள்.

புத்தகத்தினுள்ளே முதலட்டையை அடுத்து இங்கிலீஷிலுந் தமிழிலுஞ் சிங்களத்திலும் இவ்விதிகளின் ஒவ்வோர் பிரதியாக மூன்றும், மற்றை இறுதியட்டையை அடுத்து அப்படியே பிரதி மூன்றுமாக, ஆறு பிரதிகளை வைத்துப் பெலமாகக் கட்டிவைத்திருத்தல் வேண்டும்.

---

### அவர். போய் நிறை.

| | | |
|---|---|---|
| 16 டிறும் | = | 1 அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = | 1 றுத்தல் |
| 28 றுத்தல் | = | 1 குவாட்டர் |
| 4 குவாட்டர் | = | 1 கண்டிறற்வேற் |
| 20 கண்டிறற்வேற் | = | 1 தொன் |

குறிப்பு.—180 கிறேயின் 6·582 அவாட்போய் டிறும்களுக்குச்சரி; அதாவது 7 டிறும்களுக்குக் குறைய.

---

[Tender for the sale of Opium Licenses, Local Board, Negombo.]

1899 ம் ஆு 5 ம் இலக்கச்சட்டத்து ஏற்பாட்டின்படியும், 1903 ம் ஆு 14 ம் இலக்கச்சட்டத்தின் ஏற்பாட்டின்படியும் இதனாற் செய்யும் அறிவித்தல் வருமாறு:—

நீர்கொழும்பு லோக்கல் வோட் எல்லைக்குள் 1906 ம் ஆு ஜனவரி (தை)மீ 1 ந் தேதி முதலாக டிசெம்பர் (மார்கழி) மீ 31 ந் தேதி வரையும் சில்லறையில் அபின் விற்பதற்கு லைசென்சு உத்தரவுகள் விற்பனவுசெய்தற்காக நீர்கொழும்புப் பழைய கச்சேரிக் கட்டிடத்தில் இந்த 1905 ம் ஆண்டின் நொவம்பர் (கார்த்திகை)மீ 11 ந் தேதி மத்தியானம் 12 மணி வரையும் ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்கள் நீர்கொழும்பு லோக்கல்வோட் சங்கத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விக்காரன் தானாயாவது முறைமையாக எழுத்தில் அதிகாரம்பெற்ற அவனது காரியஸ்தனாவது நீர்கொழும்பு லோக்கல்வோட் கந்தோரில் 1905 ம் ஆண்டு கார்திகைமீ 11 ந் தேதி மத்தியானம் 12 மணி நேரத்தில் வந்து சமுகமாயிருந்து தனது கேள்வித்தொகையில் மூன்றிலொரு பங்கு உடனேதானே கட்ட ஆயத்தமாய் இருந்தாலொழிய யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாததாகும்.

3. இரண்டு மூன்று கேள்விகள் ஒரு சமமான தொகையாகக் கேட்கப்படும் பக்ஷத்தில் நீர்கொழும்பு லோக்கல் வோட் சங்கத்தலைவரால் தமது இஷ்டப்படி பின்வரும் வகையின் ஒன்று செய்யலாம்:—அந்தக் கேள்விக்காரர்கள் மாத்திரமே விலைவைத்துக் கேட்கும் பிரசித்த ஏலத்தில் உடனேதானே குத்தகையாக விற்கலாம்; அல்லது புதுக் கேள்விப் பத்திரங்கள் தரும்படி கேட்கலாம்; அல்லது 1899 ம் ஆண்டின் 5 ம் இலக்கமும் 1903 ம் ஆண்டின் 14 ம் இலக்கமும் கொண்ட அபின் சட்டத்தின் விதிகளுக்கு இசைய அந்தக் குத்தகையை வேறுவகையில் முடிவாக்கலாம்.

4. கேள்விப்பத்திரம் ஒவ்வொன்றிலும் கேள்விக்காரனது முழுப்பெயரும் மேல்விலாசமும் கண்டு எழுதியிருத்தல் வேண்டும்.

5. சங்கத்தலைவர் உயர்ந்த தொகைக் கேள்வியையாவது யாதேனுமொரு கேள்வியையாவது தாம் ஏற்றுக்கொள்வதாகக் கட்டுப்பாடுசெய்துகொள்கின்றாரல்லர்.

6. எவனுடைய கேள்விப்பத்திரம் அல்லது கேள்வியிலே ஏற்கப்பட்டதாமோ அவன் உத்தரவுபெறும் கொள்விலைகாரனாகுவன், அவன் தனது கேள்வித்தொகையில் மூன்றிலொருபங்கை உடனேதானே கட்டவேண்டும். இன்னும் பின்னாற் சொல்லப்படும் கட்டுப்பாடுகளுக்கு அமைந்து நடக்கவும் வேண்டும்.

7. கேள்விப்பத்திரத்தில் மாதிரிக் காகிதங்கள் நீர்கொழும்பு லோக்கல்வோட் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்

நீர்கொழும்பு லோகல்வோட்.

சில்லறையில் விற்கக் கொடுக்கப்படும் உத்தரவுப் த்திரம் ... 3

---

### சில்லறையில் அபின விற்க உத்தரவு பத்திரங்கள் கொடுப்பதற்கு ஏற்படுத்திய கட்டுப்பாடுகள்.

1. சில்லறையில் அபின் விற்க உத்தரவுவாங்கினவன் ஆனவன், தக்க அதிகாரமுடையவராலே வாங்கினவன் அவன் என்று வெளிப்படுத்திய உடனே, தனது கேள்வித்தொகையில் மூன்றிலொரு பங்கை றொக்கமாகக் கட்டிவிடுதல்வேண்டும். தக்க அதிகாரமுடையார் அந்தத் தொகையைப் பிணையாக வைத்துக்கொள்ளல் வேண்டும்; கடைசி நாலு மாதத்துத் தவணைப்பணத்துக்கல்லாமல் கேள்வித்தொகையின் தவணைப் பணமாக அதை உபயோகிக்கக்கூடாது. கேள்வித்தொகையைப் பன்னிரண்டு மாசத்துக்குஞ் சமமான தொகைப் பாகமாய்ப் பிரித்து குத்தகையிருக்கும் வரையும் மாசந்தோறும் கடைசித் தேதி நாளில் கொடுத்துவிடல் வேண்டும். முதலாந் தவணைப்பணத்தை ஜனவரி (தை)மீ 31 ந் தேதியில் கொடுத்துவிடல் வேண்டும். ஒரு தவணைப்பணம் நிலுவையாம்போது நாள் ஒன்றுக்கு நூற்றுக்கு வருஷாந்த ஒன்பது வீதவட்டி கொடுத்தல் வேண்டும். உத்தரவு வாங்கினவனது வேண்டுகோளின்படி பிணைப் பணத்தொகையை அவனுக்குப் பிரியமான ஒரு வங்கியிலே நிலையாய் (டிச்செட்) போட்டுவைக்கலாம்; அதில் ஏதும் நஷ்டம் நேரிட்டால் அது அவன் பாரமாகும். குறித்த தவணைத் தேதியிலே பணங் கொடுக்கத் தவறினால் நஷ்டம் அவனது பாரமாக, தக்க அதிகாரமுடையவர் உத்தரவை மறுபடி விற்கலாம் அல்லது செல்லாமல் நிற்கும் அத்தனை காலமளவு பாகத்தை விற்கலாம்.

2. இதனால் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்ட பண்டசாலை அல்லது இடமானது இந்த உத்தரவுப் பத்திரத்துப் பக்கத்திலே பூரணமாக விவரித்துக் காட்டியிருக்க வேண்டியது; அப்படி விவரித்துக்காட்டிய இடத்திற்கேயல்லாமல் மற்றொன்றுக்கு இந்த உத்தரவுப்பத்திரம் பொருந்துவதன்று.

3. இதனால் உத்தரவுபெற்ற இடமானது வேறும் எந்தக் கட்டடங்களோடாயினும் இடங்களோடாயினும் உட்புறமாகப் போக்குவரவு செய்யத்தக்கதாக இருக்க ஒண்ணாது.

4. இதனால் உத்தரவுபெற்ற இடத்தைத் துப்பரவாகவும் சுகவளமுடையதாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

5. தக்க அதிகாரமுடையவரால் எழுத்து மூலமாக இன்ஸ்பட்டர் பரிசோதகராக நியோகிக்கப்பட்ட எவரொருவராயினும், இன்ஸ்பட்டர் நிலைமைக்குக் கீழ்ப்படாத பொலீஸ் உத்தியோகஸ்தர் எவரொருவராயினும் கேட்கும்போது, இதனால் உத்தரவுப்பெற்ற இடத்தைப் பரிசோதனைக்காக திறந்து காட்டுதல் அவ்விடத்தைப் பொறுப்பாக உடையவனது கடமையாம். மேலும் அவன் தன் வசத்துள்ள அபினது வரவு செலவுக் கணக்கைப்பற்றிய சகல புத்தகங்களையும், காகிதப்பத்திரங்களையும், கணக்குத்தொகைகளையும் காட்டவும் கடமைப்பட்டவனுவன்; மேலும், அப்படிச்செய்யும்படி விசேஷமாகக் கேட்கப்பட்டால், பரிசோதனைக் காலத்திலே கையிருப்பில் அல்லது அவ்விடத்தில் உள்ள அபினையெல்லாம் இன்ஸ்பட்டர் அல்லது பொலிஸ் உத்தியோகஸ்தர் முன்னிலையிலே நிறுக்கவுங் கடமைப்பட்டவனுவன்; மேலும் அவன் கையிருப்பில் உள்ள அளவிற்கும், பரிசோதனைக் காலத்திலே புத்தகக் கணக்கின்படி கையிருப்பில இருக்கவேண்டிய அளவிற்கும் உள்ள யாதேனும் ஓர் வித்தியாசத்தைத் தன்னால் கூடியமட்டும் விளங்கப்படுத்திக் காட்டவும் வேண்டும்.

6. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் சாப்பிடுதல் ஒண்ணாது.

7. இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் உள்ள யாதும் அபினைக் கலந்து கெடுத்தலாவது எவ்விதத்தும் பழுதுபடுத்தலாவது செய்ய ஒண்ணாது.

8. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதுங் குழப்பமான நடக்கைகளுக்கு இடங்கொடுக்க ஒண்ணாது.

9. குடியினால் வெறித்திருக்கும் அல்லது அபினால் வெறித்திருக்கும் எவனொருவனுக்காவது, தோற்றத்தளவில் பதினைந்து வயசுக்குட்பட்ட எவனொருவனுக்காவது, இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் கொடுக்க ஒண்ணாது.

10. மாலையில் எட்டு மணிக்கும் காலையில் ஆறு மணிக்கும் இடையிலுள்ள நேரங்களில், இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் ஒப்பிக்கவும் ஒண்ணாது, கொடுக்கவும் ஒண்ணாது, வாங்கிவைக்கவும் ஒண்ணாது.

11. இலக்கமிட்ட பக்கங்களுடையதாய்க் கட்டப்பெற்ற ஒரு கையிருப்புப் புத்தகம் ஆகிய ஸ்தொக் புத்தகம் ஒன்று, இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே வைத்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்துக்காக அப்படியான புத்தகப்பிரதியொன்று தக்க அதிகாரமுடையவர் உத்தரவுப்பத்திரமெடுப்பவனுக்கு அப்போது விலையில்லாமல் சும்மா கொடுப்பார். புது புத்தகம் ஒன்று வேண்டுமானால், அதை உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே விலைகொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டியது. அவரிடத்தே முந்தின புத்தகத்தை ஒப்பித்துவிடல் வேண்டும்.

12. கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற உடனே அபின் பெற்றதொகையும் செலவானதொகையுமெல்லாம் கையிருப்புப் புத்தகத்திலே கிரமமாக எழுதிவைத்திருக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாம்; புத்தகத்தின் பந்திக் கோலங்களெல்லாம் சரிவர எழுதி நிரப்பியிருக்கவேண்டும், அன்றைத்தினத்து முதலிலும் முடிவிலும் கையிருப்பிலுள்ள தொகையைத் தெளிவுபெறக் காட்டியிருக்கவேண்டும்.

13. ஒவ்வோர் மாசத்து இரண்டாந் தேதியிலாவது அதற்கு முன்னேயாவது கையிருப்புப் புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், 20 ம் கொந்திசின்படி வைத்திருக்கவேண்டிய புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் பெரியதுரைக்கு அனுப்பிவைப்பதும் உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

14. தாம் பெற்றுக்கொள்ளும் அப்படிப்பட்ட சரியான பிரதிகளுக்காக உத்தரவுபெற்றவனுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பது பொலிஸ இன்ஸ்பெக்டர் பெரியதுரையது கடமையாகும். உத்தரவுபெற்றவன் தான் சரியான பிரதிகளைத் தபாலில் அனுப்பிய ஒரு கிழமையினுள்ளே அந்தப் பற்றுச்சீட்டுத் தனக்குக் கிடைக்கப்பெறவில்லையென்றால், பொலீஸ் இன்ஸபெக்டர் பெரியதுரைக்கு எழுதி அந்தச் சரியான பிரதிகள் கிடைத்ததோ என்று விசாரித்து அவை தவறிவிட்டால் இணைப்பிரதிகள் கொடுப்பது அந்த உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

15. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே தான் வேலைபார்க்க நியமிக்கப்போகிறவர் இன்னார் இன்னார் என்று காட்டி ஓர் பேர்வழி டாப்பை உத்தரவுபெற்றவன் உத்தரவுபெறுதற்கு முன்னே தக்க அதிகாரமுடையவரிடத்தே ஒப்பிப்பது அவனது கடமையாகும். ஒவ்வொரு பணிவிடைக்காரன் முழுப்பெயரும் விவரமும் அவன் பார்ப்பது இன்ன வகையான பணிவிடையென்றும் அந்த டாப்பிலே விதந்து காட்டியிருத்தல்வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாவரும் இருபத்தொரு வயசு சென்றவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் நல்ல நடக்கையுடையவர்களெனத் தக்க அதிகாரமுடையவர் திருப்திப்பட்டுக்கொள்ளவும் வேண்டும். தக்க அதிகாரமுடையவராலே இந்த உத்தரவுப்பத்திரத்தில் மாட்டறைந்த பேர்வழிகாரனல்லாத மற்றெவனொருவனும் தன் கணக்கில் அபினைப் பொறுப்பெருக்கவாவது, பெற்றுக்கொள்ளவாவது, விலைப்படுத்தவாவது, உத்தரவுபெற்றவன் பணிவிடைபார்ப்பிக்க ஒண்ணாது; அப்படியே மாட்டறைவுபெற்ற பேர்வழிகாரனல்லாத எவனொருவனையும் மேற்கண்ட கடமைகளுள் யாதொன்றையுஞ் செய்யவிட ஒண்ணாது.

16. பணிவிடைபார்க்கும் பேர்வழிகாரரது டாப்பிலே வேண்டியனவான மாற்றங்களைச் செய்தற்காக, உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே காலத்துக்குக்காலம் கேட்டுக்கொள்ளலாம்; அந்த மாற்றங்கள் இந்த உத்தரவுப்பத்திரத்திலே மாட்டறைந்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடைபார்க்கும் எவனொருவனையும் நீக்கிவிடும்படியாகத் தக்க அதிகாரமுடையவரிடத்தேயிருந்து நொத்தீஸ் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற உத்தரவுபெற்றவன், அந்த அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமையினுள்ளே, இந்த உத்தரவுப்பத்திரத்திலிருந்து அப்பணிவிடைக்காரனது பெயரை நீக்கிவிடும்படியாக, தக்க அதிகாரமுடையவரிடத்தே இந்த உத்தரவுப்பத்திரத்தைக் கொண்டுபோய்க் காட்டவேண்டும். அதன்பின் அப்படிப்பட்டவன் இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்ப்பதற்கு யோக்கியனாகமாட்டான்.

17. இந்த உத்தரவுப்பத்திரத்தின் இலக்கமும் உத்தரவுபெற்ற தனது பெயரும் "சில்லறையில் அபின் விற்க உத்தரவுபெற்றது" என்ற வாக்கியமும் தெளிவாய் எழுதினதொரு பலகையை, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் எல்லார்க்கும் நன்றாய்த் தெரியக்கூடிய இடத்திலே பதித்துவைக்கச்செய்வது உத்தரவு பெற்றவனது கடமையாகும்.

18. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே அபின் அல்லது சுருட்டு விற்றலே யல்லாமல் வேறொரு வியாபாரமாவது தொழிலாவது நடப்பித்தல் ஒண்ணாது.

19. அவ்விடத்திற்றனே கொடுத்த காசு ரொக்கத்துக்கல்லாமல் யாதொரு அபினும் விற்க ஒண்ணாது.

20. நாலு டிறும் நிறைக்கு அதிகமான அபினை விற்றபோதெல்லாம், அதை வாங்கினவனுடைய முழுப் பெயரையும் மேல்விலாசத்தையும் விற்ற அளவையும் விற்ற தேதியையுங் காட்டி, கையிருப்புப் புத்தகத்திலே "குறிப்பு" பந்திக் கலத்திலே எழுதிவைப்பது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

21. உத்தரவுபெற்ற இடத்திலே எந்த நேரங்களிலும் உபயோகிக்கிறதற்காக ஒரு கூட்டந் தராசுபடிகளும், கால் அவுன்ஸ், அரை அவுன்ஸ், ஒரு அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ, நாலு அவுன்ஸ், எட்டு அவுன்ஸ, ஒரு றுத்தல், இரண்டு றுத்தல், நாலு றுத்தல், ஏழு றுத்தல் ஆகிய அவாடுப்பார்ச் சாமானிய தரத்து நிறைகளையும் வைத்திருத்தல் வேண்டும்.

22. கணக்குப் புத்தகம் வைப்பதற்காக, உத்தரவுபெற்றவன் இதன் பின்னுற் சொல்லப்பட்ட விதிகளை அனுசரித்து நடத்தல் வேண்டும் :—

சில்லறை அபின் வியாபாரிகள் வைத்திருக்கவேண்டிய கையிருப்புப் புத்தகத்து மாதிரிப் பக்கம் :—

| தேதி. | | ரூ. அ. டி. | யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது. | குறிப்பு. |
|---|---|---|---|---|
| ஆனி 1.—கையிருப்பு அபின் பாக்கி | ... | 17 8 4 | | |
| பெற்றுக்கொண்டது | ... | 10 8 2 | | |
| மொத்தம் | ... | 28 0 6 | ... இலக்கம் 1 மொத்த விலையாளன் சுவான்பிள்ளை | |
| கொடுத்தது ... | ... | 1 7 9 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 26 8 13 | | |
| ஆனி 2.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | |
| மொத்தம் | ... | 26 8 13 | | |
| கொடுத்தது ... | ... | 0 15 5 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 25 9 8 | | |
| ஆனி 3.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | |
| மொத்தம் | ... | 25 9 8 | | |
| கொடுத்தது ... | ... | 2 7 1 | | |

### கைவிருப்பு ஸ்தோக் புத்தகம் வைத்திருப்பதற்கான விதிகள்.

புத்தகத்தினுள்ளே முதலட்டையை அடுத்து இங்கிலிஷிலுந் தமிழிலுஞ் சிங்களத்திலும் இவ்விதிகளின் ஒவ்வோர் பிரதியாக மூன்றும், மற்றை இறுதியட்டையை அடுத்து அப்படியே பிரதி மூன்றுமாக, ஆறு பிரதிகளை வைத்துப் பெலமாகக் கட்டிவைத்திருத்தல் வேண்டும்.

---

### அவாட்போய் நிறை.

| | | | |
|---|---|---|---|
| 16 டிரும் | = | 1 | அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = | 1 | றுத்தல் |
| 28 றுத்தல் | = | 1 | குவாட்டர் |
| 4 குவாட்டர் | = | 1 | கண்டிறற்வேற் |
| 20 கண்டிறற்வேற் | = | 1 | தொன் |

குறிப்பு.—180 கிறேய்ன் 6·582 அவாட்போய் டிரும்களுக்குச்சரி; அதாவது 7 டிரும்களுக்குக் குறைய.

ஜி. டபிற்யு. லூட்ஹவுஸ்,
லோக்கல் வோட் சபாநாயகர்.

---

[Commutation Tax, Local Board, Kurunegala.]

குறித்த தீர்மானம்.

1884 ம் ஆம் ஆண்டு 31 ம் இலக்கச்சட்டம் நிறைவேறுதிருந்தால் வீதிகளையும் வேறு போக்குவரவுகளுக்கு வழங்கும் வழிகளையும் தாபரிப்பதற்கு வேலைசெய்யவேண்டியவர்களாகிய குருநாகலைப்பட்டணத்துள்ளே வசிக்கும் ஒவ்வொரு ஆண்பிள்ளைமேலும் 1906 ம் வருஷத்துக்கு ஒரு வரி விதிக்கப்படவேண்டுமென்றும், அது இதனால் விதிக்கப்படுகின்றதென்றும் தீர்மானிக்கப்படுகின்றது. அவ்வரி ஆறு நாள் வேலைசெய்வதினால் அல்லது அவ்வேலைக்குப் பிரதியாக இரண்டு ரூபாய் பணம் 1906 ம் ஆம் பங்குனிமாதம் 31 ந் தேதியில் அல்லது அத்தேதிக்கு முன்னே கொடுப்பதினால் இறுத்துத் தீர்க்கப்படவேண்டியது.

எஸ். எம். பறேஸ்,
சவுக்கியசபை அக்கிராசனர்.

குருநாகல், 1905 ம் ஆம் ஐப்பசிமீ 27 ந் உ.

---

## UNOFFICIAL ANNOUNCEMENTS.

மொறட்டுவிலிருக்கிற மோதரகே வஸ்தியன் வாஸ் ஆகிய நான் இன்று துவக்கம் மூன்று மாசத்துக்குப்பின் 1877 ம் 2 ம் இலக்கச்சட்டத்தின் 8 ம் பிரிவின்படி சிலாவ டிஸ்திறிக்கில் சிங்கள பாஷையில் பிரசித்த நொத்தாரிசுவாக பணிவிடை நடத்திவர அதியுத்தம தேசாதிபதிவர்களிடங் கேட்க போகிறேனென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

மொ. வ. வாஸ்.
M. B. WAAS.

1905 ம் ஆண்டு ஆடிமீ 10 ந் உ.

---

குண்டி டிஸ்திறிக்கைச்சேர்ந்த ஆறியப்பத்து உடகம்பகை அக்குறணையிலிருக்கும் எம். எல். அபீபு முகம்மது லெவ்வை ஆலீம் சாகிபுவாகிய நான் என்னை அக்குறணையிலும் ஆரிஸ்பத்து முற்றிலும் தமிழ் பாஷையில் வேலை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசாக ஏற்றுக்கொள்ளும்படி இன்று துவக்கம் மூன்று மாதங்களுக்குப்பின் அதியுத்தம தேசாதிபதியவர்களுக்கு விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேனென்பதை 1877 ம் ஆண்டு 2 ம் இலக்கச் சட்டத்தில் 8 வது பிரிவின் பிரகாரம் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

எம். எல். அபீபு முகம்மதுலெவ்வை ஆலிம்சாகிபு.

அக்குறணையில்,
1905 ம் ஆண்டு ஐப்பசிமீ 17 ந் உ.

---

குண்டி டிஸ்திறிக்கைச்சேர்ந்த ஆரிஸ்பத்து உடகம்பகை அக்குறணையிலிருக்கும் எம். ஏ. முகம்மது காசிம்லெவ்வை மரைக்காராகிய நான் என்னை அக்குறணையிலும் ஆரிஸ்பத்து முற்றிலும் தமிழ்பாஷையில் வேலைபார்க்கும் பிரசித்த நொத்தாரிசாக ஏற்றுக்கொள்ளும்படி அதியுத்தம தேசாதிபதியவர்களுக்கு இன்று துவக்கம் மூன்று மாதங்களுக்குப்பின்னால் விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேனென்பதை 1877 ம் ஆண்டின் 2 ம் இலக்கச் சட்டத்தின் 8 வது பிரிவின் பிரகாரம் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

M. A. MOHAMADO CASIM LEBBE MARIKAR.
எம். ஏ. முகம்மது காசிமலெவ்வை மரைக்கார்.

அக்குறணையில்,
1905 ம் ஆ ஐப்பசிமீ 21 ந் உ.

---

குண்டி டிஸ்திறிக்கைச்சேர்ந்த ஆறியப்பத்து உடகம்பகை அக்குறணையிலிருக்கும் எம். எல். சாகுல் அமீதுலெவ்வை கத்திபுவாகிய நான் என்னை அக்குறணையிலும் ஆறியப்பத்து முற்றிலும் தமிழ்ப் பாஷையில் வேலைபார்க்கும் பிரசித்த நொத்தாரிசாக ஏற்றுக்கொள்ளும்படி இன்று துவக்கம் மூன்று மாதங்களுக்குப்பின் அதியுத்தம தேசாதிபதியவர்களுக்கு விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேனென்பதை 1877 ம் ஆண்டின் 2 ம் இலக்கச்சட்டத்தில் 8 வது பிரிவின் பிரகாரம் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

M. L. SAHUL HAMEEDO LEBBE CATIBOO.
எம். எல். சாகுல் அமீதுலெவ்வை கதீபு.

அக்குறணையில்,
1905 ம் ஆண்டு ஐப்பசிமீ 25 ந் உ.

---

GEORGE J. A. SKEEN, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON